# முதலைகளின் காலம்

புனித கங்கையின் முதலைகளுக்குத் தெரியும்
ஏழைகளின் எலும்புகள் சுவையானவை என்று.
இதனால்தான்
பசித்த முதலைகள் சில நேரம் கரையேறி
ஊருக்குள்ளும் வருவதுண்டு.
சேற்று நிற கங்கையின் முதலைகள்
எல்லாமே சந்தர்ப்பவாதிகள்.
ஓநாய்களைப் போல் அவை கூட்டமாய்
வேட்டையாடுவதில்லை என்றாலும்
சந்தர்ப்பம் பார்த்துத் தாக்குவதில் சமர்த்தர்கள்.
பிளந்த வாயின் பற்களைச் சுத்தம் செய்யும்
பறவைகளை அவை பதம் பார்ப்பதில்லை.
நதியில் வாழ வேண்டுமானால்
முதலைகளிடம் நட்பாய் இருக்க வேண்டும்
எனும் நிலைமை உருவாகி விட்டது.
ஏனெனில் இது முதலைகளின் காலம்.
--- 21 ஆகஸ்டு 2020

